முடிந்துவிட்டன. நான்கு குறுக்குக்கட்டிடங்கள் கட்டும் வேலைகள் முன்னேற்ற நிலையிலுள்ளன. மண்கரைகள் 6,500 மீட்டரிலிருந்து 8,000 மீட்டர் வரை அமைக்கப்பட வேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி/* இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

(அ) முதலமைச்சர் விடையளிக்க வேண்டிய வினுக்களை எடுத்துக்கொள்ளாதது குறித்து.

திரு. மு. கருணுநிதி: தலைவர் அவர்களே, கடந்த பத்து நாட்களாக சட்ட மன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண் டிருக்கிறது. இதில் முக்கியமாக பொது நிர்வாகத் துறை, போலீஸ் துறை, தொழில் துறை, மருத்துவத் துறை, அறநிலையத் துறை ஆகிய துறைகள் மிகப் பெரிய துறைகளாகும். இவைகளைப் பற்றி எந்தக் கேள்வியும் இந்த மாமன்றத்தில் இடம் பெரும லிருப்பதும் அதற்குரிய கேள்விகளை உறுப்பினர்கள் கேட்கிற வாய்ப்பு இல்லாமலிருப்பதும், அதற்கான விளக்கங்களை இத்தனை துறைகளையும் தன்னகத்தே வைத்திருக்கிற முதல் அமைச்சர் அவர்கள் தருகிற சூழ்நிலை இல்லாமலிருப்பதும் வருந்தத்தக்க ஒன்ருகும். இக்குறை தீர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. கி. மனேகரன்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேள்விக்கு நான் தர விரும்புகிற பதில் அடுத்தடுத்து முதல் அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற அத்தனை இலாக்காக்களையும் யொட்டிய கேள்விகளுக்கு பதில் அளிக்க அவர்கள் இருக்கிருர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS